# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 36 May 2024 Issue 5




## மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சருடன் TNROA நிர்வாகிகள் சந்திப்பு

வருவாய்த்துறை அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பாக 8.5.2024 அன்று விருதுநகரில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பில் சந்தித்து பேசப்பட்டது.

இளநிலை வருவாய் ஆய்வாளர் & முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதித்திருத்த அரசாணை, மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் காலியிடங்களை நிரப்புதல், இளநிலை உதவியாளர், தட்டச்சர் இடையேயான ஒருங்கிணைந்த பணி முதுநிலை தீர்வு உள்ளிட்டவை குறித்து பேசப்பட்டது.


தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-



திருவாரூர் வட்டக் கிளையில் நடைபெற்ற செயற்குழு கூட்டம்


விருதுநகர் TNROA சங்க செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நேரில் வழங்கப்பட்ட போது...


நாமக்கல் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்

# நேர்மையாய்....

அன்பார்ந்த தோழர்களே, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நடவடிக்கையான இந்திய நாட்டின் 18வது நாடாளுமன்றத் தேர்தல் மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. மிகக்குறுகிய கால அவகாசத்தில் 4.5 கோடி வாக்காளர்கள் எவ்வித சிரமமின்றி வாக்களிக்க அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் உளமார்ந்த வாழ்த்துகள்...

பதிவு செய்யப்பட்ட தபால் வாக்குகளை துணை வட்டாட்சியர் நிலையிலான அலுவலர்கள் நேரில் அனைத்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் உத்திரவிடப்பட்ட புதிய நடைமுறை பெரும் இடரை ஏற்படுத்தியது. இதனை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் இந்திய தேர்தல் ஆணையத்தில் முறையிட்டதன் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் செல்வதற்கு பதிலாக திருச்சிராப்பள்ளி மையத்தில் தபால் ஓட்டுகளை பரிமாற்றம் செய்திட ஆணையிடப்பட்டதால், வருவாய்த்துறை அலுவலர்களுக்கு சிரமம் களையப்பட்டது.

அதேபோன்று, 2021 சட்டமன்றத் தேர்தல் செலவினங்கள் இரண்டு ஆண்டுகள் கடந்தும் முழுமையாக வழங்கப்படாத பின்னணியில், தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை முன்னதாகவே முழுமையாக வழங்க வேண்டும் என தலைமை தேர்தல் அலுவலரிடம் தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக சில நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. இதில் பற்றாக்குறை உள்ள இனங்களை முழுமையாக வழங்கிட வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தலிலும் நடைமுறைகள் வெகுவாக அதிகரித்து வரும் நிலையில், தேர்தல் பணிகளுக்கான மதிப்பூதியத்தை இரட்டிப்பாக்கி வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது.

புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியப் பிரதமர் “அரசியலமைப்பே அனைத்திலும் உயர்வானது என்றும், இந்திய தேசத்தில் அனைவரும் சமம்” என்றுரைத்துள்ளது, ஜனநாயகத்தின் வலிமையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

தற்போது சமூக ஊடகங்களின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், தனி நபர் புகார்களுக்கு முக்கியத்துவம் அளித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள், பொதுமைப்படுத்தி துறை மற்றும் அதன் ஊழியர்கள் அனைவருக்கும் களங்கம் ஏற்படுத்துவது ஏற்புடையதாகாது. மாநிலத்தின் மக்கட் தொகை பல மடங்கு அதிகரித்துள்ளது, ஆண்டொன்றுக்கு 1 கோடிக்கும் அதிகமான சான்றிதழ்கள், தேவையான அடிப்படை கட்டமைப்புகள் இன்றி பொது மக்களுக்கு வழங்கி வரும் நிலையில், மக்கட் தொகைக்கு ஏற்ப புதிய கிராமம், உள்வட்டம் உள்ளிட்ட அலகுகளை ஏற்படுத்துவதும், அவசியமாக நிர்வாக சீர்திருத்தங்களை மேம்படுத்துவதும் அரசின் தலையாய கடமையாகும்.

தமிழக அரசின் பிற துறைகளில் 20 மண்டல அலுவலகங்கள் உள்ள நிலையில், பொது மக்களுக்கான அன்றாட தேவைகளை பூர்த்தி செய்திடும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு மண்டல அலுவலகங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டும்.

வருவாய்த்துறை அலுவலர்கள் தரப்பில் தங்களை அணுகும் பொது மக்களை இன்முகத்தோடு அவர்களின் தேவைகளை காலதாமதம் அலைகழிப்புகள் இன்றி நிறைவேற்றுவதே நமது துறையின் மாண்பை நிலைநிறுத்தும். மகாத்மா காந்தி அவர்களின் கூற்றின்படி நம்மை தேடிவரும் பொது மக்களே நமது எஜமானர், நாமே அவரை சார்ந்து உள்ளோம் என்ற அடிப்படையில் மக்கள் பணியை தூய்மையாக மேற்கொள்வோம். நமது உரிமைகளை சமரசமின்றி போராடி பெறுவோம்! ■

தொலைபேசி எண் : 28593458

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

Recognised in G.O. MS.No. 2141 Public (Service - A) Department Dated 06-10-1966

மாநில மையம்

க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

நாள்: 04.05.2024

# மாநில நிருவாகிகள் கூட்ட முடிவுகள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் கூட்டம் 04.05.2024 அன்று கரூர் மாநகரில் PLA ராம் ரெஸிடென்ஸி ஹோட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மாநிலத்துணைத் தலைவர் திரு.ஆர்.எஸ்.இராஜகோபால், மாநிலச் செயலாளர் திரு.T.D.ஜோஷி ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. மாநிலச் செயலாளர் திரு.மு.சுப்பு கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முதல் நிகழ்வாக கரூர் மாவட்டத் தலைவர் திரு.வைரபெருமாள் அனைவரையும் வரவேற்றார்

கடந்த 17.03.2024 அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற மாநில நிருவாகிகள் கூட்டத்தற்கு பின்னர் ஏற்பட்ட பல்வேறு இயற்கை சீற்றங்களினால் உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில் கடந்த கால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாகவும், குறிப்பாக பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் மத்திய செயற்குழு கூட்ட முடிவுகளின்படி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டில், மாநிலம் முழுவதும் 12,000 அலுவலர்களின் பங்கேற்போடு 11 நாட்கள் நடைபெற்ற வீரம்செறிந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவால் போராட்டம் தொடங்கிய மறுநாள் நமது வாழ்வாதார கோரிக்கையான பணியிறக்க பாதுகாப்பு விதித்திருத்த அரசாணை வெளியிடப்பட்டது என்றும், மேலும் 07.03.2024 அன்று சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக காத்திருப்பு போராட்டத்தின் காரணமாக அனைத்து பணிகளும் முடங்கியது என்றும், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60 ஆண்டு கால வரலாற்றில் இரண்டாவது நெடிய போராட்டமாக அமைந்து நமது அமைப்பை அதன் உச்சத்திற்கு கொணர்ந்துள்ளதாகவும், புதிதாக பணியேற்ற இளம் தோழர்களுக்கு பயிற்சி பாசறையாக அமைந்ததாகவும் தெரிவித்தார்.

மாநிலத் தலைவர் தனது உரையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட இத்தகைய தொடர் இயக்க நடவடிக்கைகளின் விளைவாக இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித் திருத்த அரசாணை, மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் பிரதான கோரிக்கைகளின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், எனவே இவ்வினங்களில் ஒருமாத காலத்திற்குள் அரசாணைகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் உறுதிபட தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது பெரும் சிக்கலாக உள்ள இளநிலை உதவியாளர்/தட்டச்சர் ஆகியோருக்கிடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்வது தொடர்பான கோப்பு மனிதவள மேலாண்மைத்துறையில் விரைவான நடவடிக்கையில் உள்ளது எனவும், இம்மாத இறுதிக்குள் இவ்வினத்தில் அரசாணை வெளியிட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார். நமது அமைப்பின் சார்பில் 27.02.2024 முதல் 11 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொண்டபோதிலும், வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்யப்படவில்லை எனவும், மேலும் வேலை நிறுத்த போராட்டக் காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்திட மாநில மையத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட வருவாய் அலகுகளில் இயங்கி வரும் பேரிடர் மேலாண்மைப்பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களை எவ்வித முன்னறிவிப்புமின்றி கடந்த 31.03.2023 முதல் கலைக்கப்பட்டுள்ளதை மீண்டும் வழங்கிடக் கோரி மாநில மையத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதாகவும், எனவே இப்பணியிடங்களை விரைவில் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

2024 நாடாளுமன்ற தேர்தல் அஞ்சல் வாக்கு பணிகளில் ஈடுபட்டு வரும் வருவாய்த்துறை அலுவலர்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருவது குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹூ, இ.ஆ.ப., அவர்களை மூன்று முறை நேரடியாக சந்தித்து விரிவாக பேசப்பட்டதன் அடிப்படையில் மாநிலம் முழுமைக்கும் ஒரே மையமாக திருச்சிராப்பள்ளியில் அஞ்சல் வாக்கு சேகரிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டது என்றும், இதற்கு காரணம் நமது தொடர்ச்சியான நடவடிக்கைகளே எனவும் உறுதிபட தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் கோட்டக் கலால் அலுவலர்களுக்கு வாகன ஒதுக்கீடு, ஆலய நிலங்கள் நில எடுப்பு அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்திடக் கோருதல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக மாநில மையத்தின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாநகராட்சிகளில் உள்ள உதவி ஆணையர்/துணை ஆணையர் பணியிடங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த துணை ஆட்சியர்களைக் கொண்டு நிரப்பிட மாநில மையத்தால் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும், மேலும் இக்கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களை சந்தித்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழக அரசுத் துறைகளில் கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 25% என இருந்த நடைமுறையினை மாற்றி 5%ஆக குறைக்கப்பட்டுள்ளது என்றும், இதன் மூலம் மறைமுகமாக கருணை அடிப்படையிலான பணி நியமனமங்களை முற்றாக ஒழித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே இக்கோரிக்கை குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ– ஜியோ கூட்டமைப்பு உள்ளிட்ட பொது சங்கங்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, இதனை மீண்டும் 25% ஆக நிர்ணயித்திட மாநில மையத்தின் சார்பில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை எதிர்வரும் ஆகஸ்ட் 2 மற்றும் 3 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்திட திட்டங்களை வகுத்து மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அழைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், மேலும் வைர விழா மாநாட்டு நிதியில் மாவட்டங்கள் 45% நிலுவை வைத்துள்ளதாகவும், எனவே

மாநாட்டிற்கு முன்பாக நிதி நிலுவை இனங்கள் அனைத்தும் முழுமையாக வசூல் செய்யப்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டை முன்னிட்டு தமிழகத்தின் பசுமைச் சூழலை (Green Cover) அதிகரிக்கவும், உலக வெப்பமயமாதலை (Global Warming) குறைத்திடும் சிறு பங்களிப்பாக மாநிலம் முழுதும் 60,000 மரக்கன்றுகளை நட்டு பராமரித்திடவும், மாநாட்டின் சிறப்பை குறிக்கும் வகையில் சிறப்பு தபால் உறை (Special Postal Cover) வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பொதுக் கோரிக்கைகளை வென்றெடுத்திட அரசு அங்கீகாரம் பெற்ற வருவாய்த்துறை சங்கங்களுடன் இணைந்து போராடும் வகையில் **வருவாய்த்துறை அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு** ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது பல்வேறு நிலைகளில் பணியிட பாதிப்பு அதிகமாக உள்ளதென்றும், இதனை சமாளித்திட அமைப்பை மேலும் வலிமைப்படுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட அமைப்பில் கடந்த ஆண்டில் 10,253 உறுப்பினர்களுக்கான இணைப்புக் கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே 2024ஆம் ஆண்டில் ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா உள்ளிட்ட நிதி நிலுவைகள் ஆகியவற்றை 100% வசூல் செய்து 31.05.2024க்குள் செலுத்திட மாவட்ட மையங்கள் உறுதி ஏற்க வேண்டும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள், அதீத பணி நெருக்கடி மக்களுடன் முதல்வர் திட்டப்பணிகள் மற்றும் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதால் மாவட்டங்களில் பணிபுரிந்து வரும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு வகையிலான பணி நெருக்கடிகள், இளநிலை வருவாய் ஆய்வாளர் / தட்டச்சர் ஆகியோருக்கு இடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்வதில் மனிதவள மேலாண்மைத் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவையற்ற குளறுபடிகள், இதனால் அனைத்து நிலையிலான பதவி உயர்வில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் மாநிலத் தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் தனது உரையில் கடந்த 17.03.2024ல் திருச்சிராப்பள்ளி மாநகரில் நடைபெற்ற மாநில நிருவாகிகள் கூட்டத்திற்கு பின்பாக கடந்த இரண்டு மாதத்தில் மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 05.04.2024 அன்று சென்னையில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., மற்றும் கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) மரு.எஸ்.நடராஜன், இ.ஆ.ப., ஆகியோரைச் சந்தித்து பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்கப் பாதுகாப்பு விதித்திருத்த அரசாணையினை அமுல்படுத்திட உரிய சுற்றறிக்கையினை காலம் தாழ்த்தாமல் விரைந்து வழங்கிடுமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும், அரசு முதன்மைச் செயலாளர்/தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரதசாஹூ, இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்து 2024ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் முன்கூட்டியே நிதி ஒதுக்கீடு வழங்கிடவும், வாக்கு பதிவு இயந்திரங்களை பாதுகாத்திடும் பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கு தேவையான குளிர்சாதன வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தரக்கோரி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் கடந்த 05.04.2024 அன்று சென்னையில் மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் திரு.நாகராஜன், இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற

விதித்திருத்த அரசாணை மற்றும் இளநிலை உதவியாளர்/தட்டச்சர் ஆகியோருக்கிடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்திடுவது தொடர்பான திருத்திய அரசாணை ஆகியவற்றை விரைந்து வெளியிட வலியுறுத்தி முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 05.04.2024 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் திரு.இராஜாராமன், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை தொடர்பாக அரசுக்கு அளித்துள்ள மேல்முறையீட்டு மனு மற்றும் தேனி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் தங்களது பணி முதுநிலையை மறுநிர்ணயம் செய்திடக் கோரி கொடுத்துக் கொண்டுள்ள சீராய்வு மனு அரசிடம் ஆண்டுக் கணக்கில் நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி மேற்கண்ட இரண்டு சீராய்வு மனுக்களின் மீதும் விரைந்து ஆணைகள் வழங்கிட வலியுறுத்தி முறையீடு அளித்து விரிவாக பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் சார்பில் கடந்த 25.04.2024 அன்று சென்னையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் திரு.இராஜாராமன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) மரு.எஸ்.நடராஜன், இ.ஆ.ப., ஆகியோரைச் சந்தித்து கடந்த 08.03.2024 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உறுதியளித்தபடி வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்வைக்கப்பட்டு நிலுவையிலுள்ள கோரிக்கைகளின் மீது ஒருமாத காலத்திற்குள் ஆணைகள் வழங்கிடுமாறு விரிவாக பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

கடந்த கால நடவடிக்கைகளில் சங்கத்தின் செயல்பாடுகள் சிறப்பான முறையில் உள்ளதாகவும், கடந்த 27.02.2024 முதல் 11 நாட்கள் நடைபெறற் காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் 07.03.2024 அன்று சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற 2000 அலுவலர்கள் கலந்து கொண்ட மாபெரும் காத்திருப்பு போராட்டம் ஆகியவை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் இயக்க வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்ததோடு மட்டுமின்றி மாவட்டங்களில் மிகுந்த எழுச்சியை உருவாக்கியுள்ளது என்றும், இத்தகைய போராட்டத்தினால் நமது வாழ்வாதாரக் கோரிக்கைகளின் மீது அரசு மட்டத்தில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் 2024ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா, வைர விழா மாநில மாநாட்டு நிதி, கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, மாநில மைய காலண்டர் நிதி மற்றும் TNGEA மாநாட்டு நிதி உள்ளிட்ட நிதி நிலுவை இனங்கள் மற்றும் கடந்த ஒரு மாதத்திற்கான வரவு செலவு குறித்த அறிக்கையினை கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

அனைத்து மாநில நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப்பட்டன.

1) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை ஆகஸ்ட் 2 & 3 தேதிகளில் சென்னையில் சிறப்பாக நடத்திடுவது என்றும், இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த உயர் அலுவலர்களை சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றிட அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

2) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு 7 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே கடந்த 08.03.2024 அன்றைய தினம் அரசு மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உறுதியளித்தபடி அரசாணையினை விரைந்து வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

3) இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகியோருக்கிடையே ஒருங்கிணைந்த பணி முதுநிலை நிர்ணயிப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இதனால் அவர்களுக்கிடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்து, முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தில் மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் அவர்கள் நேரடியாக தலையிட்டு உரிய தெளிவுரை வழங்கிட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

4) தமிழகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 21 மாநகராட்சிகளில் உள்ள உதவி ஆணையர்/துணை ஆணையர் பணியிடங்களில் ஏற்கனவே உள்ள நடைமுறையினை பின்பற்றி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த துணை ஆட்சியர்களைக் கொண்டு நிரப்பிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்து.

5) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம் / ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதி முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை இரவு / பகல் பாராது விடுமுறை தினங்களில் கூட தொடர்ந்து 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

6) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாக உள்ள மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடுமாறு கடந்த ஓராண்டாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இதுவரை இப்பணியிடங்கள் நிரப்பப்படாததால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் அதிக அளவிலான பணியிடங்கள் காலியாக உள்ளது. எனவே இவ்வினத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய ஆணைகள் வழங்கிடுமாறு தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

7) பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காகக் க்கூடிய பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டு வந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை கடந்த 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதை இரத்து செய்து, கலைக்கப்பட்ட 97 பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

8) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில்

வரப்பெறும் மனுக்களை விரைவாக முடிவு செய்திடும் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி "முதல்வரின் முகவரி" மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

9) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (TASMAC) உள்ள 16 மாவட்ட மேலாளர் பணியிடங்களில் எம்.பி.ஏ. பட்டதாரிகளை தொகுப்பூதியத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்நியமனத்தில் நடைமுறையிலுள்ள சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. எனவே ஏற்கனவே உள்ள நடைமுறையைப் பின்பற்றி இப்பணியிடங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த துணை ஆட்சியர்களை நியமித்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

10) தமிழக அரசுத்துறைகளில் கருணை அடிப்பபடை பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 25% என இருந்ததை தற்போது 5% ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டு, கருணை அடிப்படை பணிநியமனம் என்பதே முற்றிலும் இல்லாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதனை ரத்து செய்து மீண்டும் 25% ஆக நிர்ணயம் செய்திட தமிழக அரசை வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

11) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ன 2024 தற்காலிக பணியிடங்களில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மாதந்தோறும் குறித்த நாட்களில் ஊதியம் பெற இயலாமல் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். எனவே இதனைக் களைந்திடும் விதமாக மாதந்தோறும் ஊதியக் கொடுப்பாணை வழங்கிடும் நடைமுறையினை இரத்து செய்து, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஊதியக் கொடுப்பாணை வழங்கிடுமாறும், மேலும் தற்காலிக பணியிடங்களை மறு சீரமைத்திட தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு விலக்கு அளித்திடுமாறும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

12) புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, உரியகாலத்தில் பதவி உயர்வு வழங்கப்படாததால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஓராண்டிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. மேலும் இதுகுறித்து பாதிக்கப்பட்ட அலுவலர்களை அரசு மட்டத்தில் நேரடி விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தில் உடனடியாக தக்க ஆணை பிறப்பித்திட வருவாய்த்துறை செயலாளரை வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

13) ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு கடந்த ஓராண்டாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இதன்மீது விரைந்து உரிய ஆணைகள் பிறப்பித்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

14) 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள் முடிவுற்று ஒரு மாத காலமாகியும் இதுவரை முழுமையான நிதி ஒதுக்கடுறி வழங்கப்படவில்லை. இதனால் பல்வேறு இடங்களில் கடன் பெற்று தேர்தல் செலவினத்தை மேற்கொண்ட வட்டாட்சியர்கள் கடும் மன உளைச்சலில் உள்ளனர். எனவே இந்நேர்வில் அனைத்து தேர்தல் செலவினங்களுக்கும் உரிய நிதி ஒதுக்கீட்டினை முழுமையான அளவில் ஒதுக்கீடு செய்திட தமிழக தலைமைத் தேர்தல் அலுவலரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

15) தமிழகத்தில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது

பன்மடங்கு உற்பத்தி கூடுதலாக நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் குறைந்த அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டும், தவறான பயன்பாடுகளை தடுத்திடும் வகையிலும், கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்படுத்திட உள்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

16) 16.08.2022 ,01.11.2022, 10.05.2023, 16.05.2023 மற்றும் 0803.2024 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

17) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்ததை ரத்து செய்திட வலியுறுத்தி அறவழியில் போராட்டம் நடத்திய வருவாய்த்துறை அலுவலர்கள் மீது கடுமையான பிரிவுகளின் கீழ் புனையப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்திட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு கூடுதல் தலைமைச்செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்றும், இதில் தீர்வு ஏற்படாதபட்சத்தில் தொடர் இயக்க நடவடிக்கைகளை திட்டமிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

18) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வரலாற்று சிறப்பு வாய்ந்த வைர விழா ஆண்டை முன்னிட்டு, தமிழகத்தின் பசுமைச்சூழலை (Green Cover) அதிகரித்திடவும், உலக வெப்பமயமாதலை (Global Warming) குறைத்திடவும், சிறு பங்களிப்பாக தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் 60,000 மரக்கன்றுகளை நடுவது என்றும், வைர விழா மாநாட்டின் சிறப்பை குறித்திடும் வகையில் சிறப்பு தபால் உரை (Special Postal Cover) வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

19) எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொருட்டு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அடுத்த மத்திய செயற்குழு கூட்டத்தை எதிர்வரும் 15.06.2024 அன்று திருப்பத்தூர் மாவட்டத்தில் சிறப்புற நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

20) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் உறுப்பினர் சேர்க்கை 14,000 என்ற இலக்கினை எய்திடும் விதமாக திருப்பத்தூர் மத்திய செயற்குழுவிற்கு முன்னதாக 31.05.2024 அன்று அனைத்து மாவட்ட மையங்களுடன் காணொளி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் நடத்துவதுதென முடிவு செய்யப்பட்டது.

21) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட 2024ம் ஆண்டிற்கான உறுப்பினர் சேர்க்கை மற்றும் சங்கக் குரல் சந்தா சேகரிப்பு இயக்கத்தை அனைத்து மாவட்டம், நகரம் மற்றும் வட்டக் கிளைகளில் உடன் தொடங்குவது என்றும், உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து அடுத்த மத்திய செயற்குழுவிற்கு முன்பாக செலுத்திட அனைத்து மாவட்டங்களையும் வலியுறுத்துவதெனவும், மேலும், சென்னை தலைமையக கட்டட நிதி நிலுவை, வைர விழா மாநில மாநாட்டு நிதி, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, 2023 & 2024ம் ஆண்டுகளுக்கான நாட்குறிப்பு நிதி மற்றும் நாட்காட்டி நிதி உள்ளிட்ட அனைத்து நிதி நிலுவை இனங்களையும், இம்மாத இறுதிக்குள் செலுத்திடுமாறு மாவட்ட மையங்களை வலியுறுத்தவதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் குறுகிய காலத்தில் மாநில நிருவாகிகள் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த கரூர் மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். ■

# பாலியல் குற்றங்கள்: குழந்தைகளைப் பாதுகாக்கும் வழி



ஹங்கேரியின் முதல் பெண் அதிபராக 2022 இல் பதவியேற்ற கதலின் நோவேக், தனக்கு இருந்த மன்னிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனைக் குற்றவாளிகள் சிலரை விடுதலை செய்தார். அவர்களில், சிறார் பாலியல் வன்கொடுமை தொடர்பாக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய ஒரு நபரும் அடக்கம்.

இச்செய்தி வெளியானதும், பொதுச் சமூகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் குதித்தனர். இதனையடுத்து அதிபர் கதலினும், அப்பட்டியலை அங்கீகரித்த அன்றைய சட்ட அமைச்சர் யூடித் வார்காவும் பதவி விலகினர். குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை ஐரோப்பிய சமூகம் எவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொள்கிறது என்பதற்கு இச்சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

உலகெங்கும் வாழும் சிறார்களில் 18% பெண் குழந்தைகளும், 8% ஆண் குழந்தைகளும் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சிறார் மீதான பாலியல் வன்கொடுமை என்பது அக்குழந்தைகளின் உடல், மன நலன் சார்ந்த ஒன்று மட்டுமல்ல; அது சமூகவியல் பிரச்சினையும்கூட. பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகும் குழந்தைகள் வாழ்நாள் முழுக்க மன அழுத்தத்துடனும், உடல்நலம் சார்ந்த சிக்கல்களோடும் வாழ நேர்கிறது.

இவற்றின் பலனாக வெறுப்பும், குற்றவுணர்வும், இயலாமையும் மேலோங்க, அவர்களில் சிலர் குற்றச்செயல்களில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். இது ஒரு சங்கிலித் தொடர் போல் நீடிக்கும்போது சமூகச் சமநிலை தொடர் பாதிப்புக்கு உள்ளாகிறது.

**வீட்டிலும் பாதுகாப்பில்லை:** இந்தியாவில், 2012ஆம் ஆண்டில் இக்குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO, 2012) இயற்றப்பட்டது.

அரசின் புள்ளி விவரங்களின்படி 2013 முதல் 2022 வரையிலான காலத்தில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்தே வந்துள்ளன.

விதிவிலக்காக கரோனா பாதிப்புகள் தீவிரமடைந்த 2020இல் மட்டும் அக்குற்றங்கள் சற்றே சரிவடைந்துள்ளதைக் காணலாம். அதேவேளையில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் பெரிய சரிவு ஏற்படவில்லை. குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே செல்லாதபோது பிறரால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளான தாக்குதலுக்கு உள்ளாதல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் ஆகியவற்றுக்கான சாத்தியங்கள் குறைகின்றன என்பது இதன்மூலம் தெரிய வருகிறது.

அதேநேரம், குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோரில் பெரும்பான்மையானோர் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உறவினராகவோ, நன்கு அறிமுகமானவராகவோதான் இருப்பார்கள் என்பதால், குழந்தைகள் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த சூழலிலும் அவர்கள் மீது நிகழ்ந்த பாலியல் தாக்குதல்களின் எண்ணிக்கை குறையவில்லை. அதாவது, நம் குழந்தைகள் அவரவர் வீடுகளில்கூடப் பாதுகாப்பாக இல்லை.

இந்திய அரசு வெளியிட்டுள்ள 2022ஆம் ஆண்டுக்கான குற்றக்கணக்கீட்டு அறிக்கையின்படி (Crime in India - 2022), அந்த ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் 1,62,449 குற்றங்கள் சிறார்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுள்ளன. இவற்றில் 63,414 நிகழ்வுகள் போக்சோ சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ளன. அதாவது, குழந்தைகளுக்கு எதிராக இந்தியாவில் நடைபெறும் 10 குற்றங்களில் நான்கு பாலியல் வன்கொடுமை தொடர்பானவை.

ஒட்டுமொத்த போக்சோ வழக்குகளில் கிட்டத்தட்ட சரிபாதியானவை உத்தரப் பிரதேசம் (8,136), மகாராஷ்டிரம் (7,572), மத்தியப் பிரதேசம் (5,996), தமிழ்நாடு (4,968), ராஜஸ்தான் (3,731) ஆகிய ஐந்து மாநிலங்களில் பதிவாகியுள்ளன. அடுத்த இடங்களில் கேரளமும் (3,334), கர்நாடகமும் (3,155) உள்ளன. தென் மாநிலங்களில் தமிழ்நாடுதான் இத்தகைய குற்றங்களில் முதலிடத்தில் உள்ளது.

**தமிழ்நாட்டில் என்ன நிலவரம்?** தமிழ்நாட்டில் நடைபெறும் சிறார்களுக்கு எதிரான குற்றங்களில் நான்கில் மூன்று பங்கு நிகழ்வுகள் அவர்கள் மீதான பாலியல் தாக்குதலுடன் தொடர்புடையதாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதை நாடு அளவிலான விகிதத்துடன் (39%), ஒப்பிட்டால் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகம் (76%). தமிழ்நாட்டில் நடைபெற்ற போக்சோ குற்றங்களில் 5,106 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போக்சோ சட்டத்தின் பல்வேறு உட்பிரிவுகளின்கீழ் பதிவான வழக்குகளையும், அவற்றால் பாதிப்படைந்த குழந்தைகளின் எண்ணிக்கையையும் பார்க்கும்போது, ஒரே குற்ற நிகழ்வில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

ஒப்பீட்டளவில் ஆண் குழந்தைகளைவிட, பெண் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகக் குற்றக் கணக்கீட்டு அறிக்கை தெரிவிக்கிறது. ஆண் குழந்தைகளும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாவார்கள், குற்றவாளிகள் பெண்களாக இருக்கக்கூடும் என்பதையும் வியப்பாகக் காணும் நிலையே இன்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்தத் தரவுகள், கல்வி, பொருளாதார வளர்ச்சியில் முன்வரிசையில் இருக்கும் முற்போக்கான மாநிலமான தமிழ்நாடு, சிறார் நலனில் மிகவும் பின்தங்கியுள்ளது என்பதையே காட்டுகின்றன. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து அனைவருக்கும் புரிதலை ஏற்படுத்துவது, குழந்தைகள் பாதிக்கப்படும்போது, அவர்களுக்கான மருத்துவத் தீர்வுகள், ஆற்றுப்படுத்தும் வழிமுறைகள், சட்ட உதவிகள் ஆகியவற்றை வழங்க வேண்டியது அரசின் கடமை. மாநில அளவில் இதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கினால்தான் அக்குழந்தைகளை மீட்டெடுத்துப் பொது நீரோட்டத்தில் கலக்கச் செய்ய இயலும்.

பாலியல் குற்றங்களைத் தவிர்க்க... பலவந்தமான பாலியல் தாக்குதல் (Penetrative sexual Assault), எல்லை மீறிய பலவந்தமான பாலியல் தாக்குதல் (Aggravated penetrative sexual assault), எல்லை மீறிய பாலியல் தாக்குதல் (Aggravated Sexual Assault), பாலியல் தொந்தரவு (Sexual Harassment) என்பன உள்ளிட்டவற்றை குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் என வகைப்படுத்தி, அவற்றுக்கான தண்டனைகளையும் சட்ட வழியிலான தீர்வுகளையும் போக்சோ சட்டம் முன்வைக்கிறது. அத்துடன் ஊடகங்கள், மருத்துவர்கள், காவலர்கள், நீதித் துறையினர் இப்பிரச்சினைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

வேறு யாரிடமும் அதிகாரத்தைச் செலுத்த இயலாத சிலர் தங்களைவிடப் பலவீனமாக இருக்கும் குழந்தைகள் மீது பாலியல் தாக்குதல் தொடுப்பது உண்டு. முறையான பாலுறவுக்கான வாய்ப்பற்றோர், பாலுணர்வுக் குறைபாடு கொண்டோர், போதை அடிமைகள், மனநல பாதிப்பு கொண்டோர், பிறவியிலேயே குழந்தைகள் மீது காமம் கொள்ளும் நிலை கொண்டோரும் (born pedophile) இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் ‘வாடிக்கைக் குற்றவாளி’களாக (habitual offender) இருக்கின்றனர்.

இது மிகச் சிக்கலான நிலை என்றாலும், இந்த வாடிக்கைத்தனம்தான் அவர்களைக் கண்டறியவும், கட்டுப்படுத்தவும் காரணியாக அமைகிறது. குற்றச்சாட்டுக்கு உள்ளானோரைத் தொடர் கண்காணிப்பில் வைத்திருப்பது, குற்றவாளிகளைத் தனிமைப்படுத்தி, குழந்தைகளிடம் இருந்து வெகுதூரம் விலக்கி வைப்பது, அவர்கள் குறித்த பகுதிவாரியான பதிவேடுகளைப் பராமரிப்பது, சிறைத்தண்டனை முடிந்து விடுதலையாகும் குற்றவாளிகளைக் கண்காணிக்க முறையான அமைப்புகள், முறைமைகளை உருவாக்குவது ஆகியவற்றுடன் அவர்களுக்கு உளவியல், மருத்துவச் சிகிச்சைகள் அளிப்பதும் அவசியம். இதன்மூலம் அவர்கள் மீண்டும் இத்தகைய குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க முடியும்.

அதேபோல், அதிகார அழுத்தங்களைப் பயன்படுத்தி இக்குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிவிடாமல் இருக்க மேற்கத்திய சமூகங்களின் சட்ட, சமூக நடவடிக்கைகளை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது.

**குழந்தைகளைக் காப்போம்:** முதற்கட்டமாக இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் தனிநபர் சார்ந்த தகவல்கள் (personal information), அவர்களுடைய சமூக, பொருளாதாரப் பின்னணி, குற்றம் நிகழ்ந்த இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களைச் சேகரிப்பதன் வழியே இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நம்மால் உருவாக்க முடியும்.

தரவுகளையும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் இணைத்து இத்தகைய குற்றங்களை முன்கூட்டியே துல்லியமாகக் கணிக்கவும் இயலும். அது சார்ந்த ஆய்வுகளை முன்னெடுப்பது இன்றைய காலத்தில் கட்டாயம். ஆனால், அதற்கான தரவுக் கட்டமைப்போ, ஒருங்கிணைப்போ, ஒத்துழைக்கும் மனநிலையோ அரசு இயந்திரத்திடம் இல்லை.

குழந்தைகளுக்கு எதிராகக் குற்றமிழைப்பவர்கள், அவர்களுக்குத் துணை நிற்பவர்கள் அனைவருமே சமூகத்துக்கு எதிரான பிறழ் மனநிலை கொண்டவர்கள்; அது மட்டுமல்ல அவர்கள் அறம் பிறழ்ந்தவர்களும்கூட. ஜனநாயக அமைப்பில் அறத்தைக் கூற்றாக்கி, நீதியை நிலைநாட்டுவது மக்களாகிய நம் கைகளில்தான் உள்ளது. மானுடகுலத்தின் விதை நெல்களான குழந்தைகளைக் காப்பதுதான் நம் தலையாய கடமை. அதற்கான முயற்சிகளை இன்றே, நமது மாநிலத்தில் இருந்து தொடங்குவோம்.

நன்றி : இந்து தமிழ் தென்திசை

New Health Insurance Scheme for Employees and Pensioners - To facilitate cashless treatment in Government institutions under this Scheme - General and Financial guidelines - Orders - Issued.

---

**HEALTH AND FAMILY WELFARE (EAPI-1) DEPARTMENT**

**G.O.(Ms) No.130** **Dated:07.06.2024**

குரோதி, வைகாசி-25

திருவள்ளுவர் ஆண்டு-**2055**

**Read:**

1 G.O.(Ms) No.160, Finance (Salaries) Department, Dated:29.06.2021.
2. G.O.(Ms) No.204, Finance (Health Insurance) Department, Dated:30.06.2022.
3. From the Project Director, Tamil Nadu Health Systems Project letter No.10283/TNHSP/Ins/2022, dated 13.03.2024.

**ORDER:**

In the Government orders first and second read above, orders were issued for implementation of New Health Insurance Scheme, 2021 for Employees for the period of four years from 01.07.2021 to 30.06.2025 and New Health Insurance Scheme, 2022 for Pensioners for the period of four years from 01.07.2022 to 30.06.2026 to provide cashless medical assistance upto Rs.5.00 Lakh in a block of four years to the Government Employees and their family members and Pensioners/Family Pensioners and also to provide medical assistance up-to Rs.10.0Q Iakh for specific illnesses.

2. In the letter third read above, the Project Director, Tamil Nadu Health Systems Project has submitted the General and Financial guidelines for implementing the New Health Insurance Scheme and requested the Government to approve the draft General and Financial guidelines for New Health Insurance Scheme for employees and pensioners under cashless treatment in Government institutions under the control of Director of Medical Education and Research and Director of Medical and Rural Health Services.

3. The Government have carefully examined the proposal of the Project Director, Tamil Nadu Health Systems Project and decided to accept the same. Accordingly, the Government approves the General and Financial guidelines annexed to this Government order for New Health Insurance Scheme for employees and pensioners undergoing cashless treatment in Government institutions under the control of Director of Medical Education and Research and Director of Medical and Rural Health Services.

4. This orders issues with the concurrence of Finance Department, vide its U.O.No.5375793/Finance (HI-1)/2023-21, dated 25.04.2024.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**GAGANDEEP SINGH BEDI**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## ANNEXURE

**G.O.(Ms).No.130, Health and Family Welfare (EAPI-1) Department. Dated:07.06.2024 HEALTH INSURANCE SCHEME FOR EMPLOYEES AND PENSIONERS FOR IMPLEMENTATION IN GOVERNMENT HOSPITALS**

**1. BRIEF ABOUT GOVERNMENT EMPLOYEES' NEW HEALTH INSURANCE SCHEME 2021:**

**(i) Introduction:** New Health Insurance Scheme implemented in 2008 has been extended from 01.07.2021 for four years through United India Insurance Company Limited, Chennai

**(ii) Beneficiaries:** The Scheme covers about 10 lakh Employees of Government Departments, Local Bodies, Public Sector Undertakings, Statutory Boards and State Government Universities, willing State Government Organizations/ Institutions along with their dependent family members.

**(iii) Special Features:**

a) Cashless medical assistance;

b) Quantum of assistance enhanced from Rs.4.00 lakh to Rs.5.00 lakh for a block of four years.

c) Quantum of.assistance for specified treatments enhanced from Rs.7.5 lakh to Rs.10 lakh;

d) Emergency Care coverage extended to treatments in Non- Network 'Hospital also;

e) Reimbursement of 75% of medical expenditure for the treatment taken in Non- Network Hospitals;

f) Number of treatments increased from 113 to 203;

g) 1296 Network hospitals empanelled;

h) Monthly deduction of Rs.300/- (Rs.295/- Subscription + Rs.5/- Contribution for Corpus Fund) from the salaries of employees since July 2021.

i) Creation of Corpus Fund with a sum of Five crores for COVID-19 treatment.

**iv) Additional Features:**

a) Coverage of dependent children of Government Employees and for special cases, irrespective of their age above 25 years. **(G.O.Ms.No.293, Finance (Health Insurance -1) Department, dated 30.12.2021)**

b) Inclusion of Covid-19 Treatment under Specified illness list with effect from 14.02.2022 to avail medical assistance upto Rs.10.00 lakh for employee and Rs.7.50 lakh for Pensioners and subsequently Rs.10 lakh to Pensioners from 01.07.2022 **(G.O.Ms.No.39, Finance (Health Insurance -1) Department, dated 14.02.2022)**

c) Exemption for placing the Covid-19 claims in the District Level Empowered Committee **(G.O.Ms.No.46, Finance (Health InSurance-1) Department, dated 21.02.2022)**

d) Comprehensive Guidelines for reimbursement of medical expenses' to consider under the Corpus Fund for meeting higher expenses in respect of rare and exceptional circumstances for a sum of Rs.10.00 lakh exceeding the maximum assistance of Rs.10 lakh available under New Health Insurance Scheme 2021 for Employees of Government Departments and their eligible family members. Total claims shall not exceed Rs.20 lakh (both inclusive) **(G.O.Ms.No.120, Finance (Health Insurance -1) Department dated 2.5.2022)**

**2. BRIEF INTRODUCTION ABOUT PENSIONERS NEW HEALTH INSURANCE SCHEME 2022:**

**(i) Introduction:** New Health Insurance Scheme for Pensioners, is implemented from 01.07.2014 and has been extended from 01.07.2022 for four years through United India Insurance Company Limited, Chennai;

**(ii) Beneficiaries:** The scheme covers about 12 Iakh beneficiaries of Pensioners including their spouse

**(iii) Special features:**

a) Cashless medical assistance

B) Medical treatment upto Rs.5.00 lakh

c) Medical assistance upto Rs.10.00 Iakh for some specified diseases / treatments

d) Coverage of 203 treatments and surgeries

e) Emergency Care coverage extended to Non- Network Hospitals also

f) Reimbursement of 75% of medical expenditure for the treatment taken in Non-Network Hospitals.

g) 1294 Network hospitals empaneled

h) Monthly deduction of Rs.497/- from the pension towards subscription

i) Creation of Corpus Fund with a sum of Rs.2.5 crore for the COVID-19 treatment.

**3. REDRESSAL OF GRIEVANCES & REIMBURSEMENT OF PAYMENT :**

Redressal of grievances and reimbursement of payment shall be conducted as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government

employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**4. Empanelment of Government Hospitals**

(i) In the annexure—A, para 9 of the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees, it has been mentioned that; The Hospitals under the Scheme shall include

(a) Pay wards of Government Hospitals; and

(b) Private Hospitals.

(ii) In the annexure—A, para 9 of the G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022 for pensioners, it has been mentioned that The Hospitals under the Scheme shall include both:-

a) Government Hospitals already empanelled under Chief Minister's Comprehensive Health Insurance Scheme shall automatically be deemed to be Network Hospitals and the Insurance Company shall ensure that they enter into a tie-up with these hospitals within one month of the commencement of the Scheme; and

b) Private Hospitals.

**5. Implementation of New Health Insurance Scheme in Government Hospitals:**

(i) The United India Insurance Company Limited, Chennai should take necessary steps to facilitate the provision to include the Government institutions under the control of the Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research which are already empaneled under Chief Minister Comprehensive Health Insurance Scheme.

(ii) The Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research should also follow up the following:-

a) Sign MoU with UIIC for the empanelment of the Government hospitals

b) Issue necessary instructions to the Government Institutions under the Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research to accommodate the New Health Insurance Scheme Employees and Pensioners for taking treatment in the Government Institutions and to extend their co-ordination with the United India Insurance Company Limited to process the claims received in the Government Institutions.

(iii) Issue exemption from getting ROHINI ID to the empanelled Government Institutions as was given for Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

(iv) Being a Government institution, deducting TDS / PAN Number be waived off as was given for Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

(v) Existing Chief Minister's Comprehensive Health Insurance Scheme 500 wards for Government employees and pensioners under New Health Insurance Scheme may be utilized until the special rooms for New Health Insurance Scheme are created.

**6. Issue of Identity Cards:**

The identity cards issued by the Insurance Company to cover the beneficiaries with the details of the Employees and their eligible family members of Government Departments etc., should be accepted by the Government Institutions as mentioned as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022. In case of non-availability of ID Card, the beneficiaries can produce the form for furnishing data of employee and their eligible family members for insurance coverage under New Health Insurance Scheme, 2021 mentioned in Annexure VI in the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and Annexure III for Pensioners as mentioned in the G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**7. List of Procedures Covered Under New Health Insurance Scheme For Employees and Pensioners:**

The procedures covered under NHIS for employees and pensioners are listed as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**8. GENERAL GUIDELINES TO BE FOLLOWED FOR MEDICAL AILMENT UNDER NEW HEALTH INSURANCE SCHEME IN GOVERNMENT INSTITUTIONS:**

(i) General Procedures to be folowed by the Beneficiary (Both Employee and Pensioner):

a) New Health Insurance Scheme beneficiary can approach any of the empanelled Government Health Facilities within the State of Tamil Nadu for medical ailments of the approved procedures under NHIS

b) The New Health Insurance Scheme beneficiary should approach the New Health Insurance Scheme Nodal Officer of that concemed institution with a valid New Health Insurance Scheme Identity Card

c) In case of non-availability of New Health Insurance Scheme ID cant Annexure VI (for employees) / Annexure III (for pensioners) of the mentioned Government Orders may be submitted, as per the respective"guidelines

(ii) General Procedures to be followed by the Government Health Facility

a) A Nodal officer for New Health Insurance Scheme should be designated by the each of the empanelled Government hospitals

b) The New Health Insurance Scheme Nodal Person of that Health Facility should verify the New Health Insurance Scheme ID card/Annexure V-as per guidelines in the G.O.Ms.No.160 Finance (Salaries) Department dated 29.6.2021 for Government employees/Annexure - as per G.O.Ms.No.204, Finance (Health Insurance dept.), dated 3062022 for pensioners.

c) If the New Health Insurance Scheme beneficiary needs any treatment for the procedures approved under New Health Insurance Scheme the department New Health Insurance Scheme Nodal Officer (OMER and DM&RHS Hospitals) should raise preauthorization

through the insurer portal or mail communication within 48 hours of admission, considering the emergency of the medical situation and availability of documents

d) The following documents are to be mailed/upicaded:

i.New Health Insurance Scheme Identity Card or Annexure W"Annexure IIL per the

ii. Preauthorization form along with the diagnosis and plan of management

e) As Finance GO.Ms.No.160 (Salaries) Department dated 29.6.2021 for Govemment employees and for pensioners as G.O.Ms.No.204, Finance (Health Insurance Department dated 3062022 preauthorization approval will be given within 24 hrs. And after getting the preauthorization approval, the Government Health Facility can proces the management

f) In case of emergency, treatment may be started immediately preauthorization request with mandatory documents may be submit within 48 hours.

g) On the day of discharge, the hospital should upload / mail the discharge summary and the New Health Insurance Scheme receipt (enclosed as Annexures) for claims approval.

h) The Department New Health Insurance Scheme Nodal Officer (ONER & DM&RHS Hospitals) should clearly mention the details of the patient diagnosis and the approved package amount in the New Health Insuran Scheme receipt.

i) Original document (Discharge Summary, Investigation Report, Invoice, CT scan Reports, X ray) need not be submitted, but should be maintained safely in the Medical Records Department in the respective hospital. Instead, a copy of the above documents duly attested by the Head of the Institution / Nodal Officer should be sent to UIIC.

Note: New Health Insurance Scheme receipt has to be duly signed by the New Health Insurance Scheme Nodal Officer of that concerned institution with seal.

j) On approval of claims, the insurer should pay the claims amount within 30 days from the date of approval of claims.

k) Any queries raised by the insurer should be addressed within 24 hours.

i) The Director of Medical Education & Research Hospitals should open a Separate Department Wise Bank Account for the New Health Insurance Scheme claims as per the procedure followed under Chief Minister's Comprehensive Health Insurance Scheme

**9. Financial Guidelines to be followed for Treatment under NEW HEALTH INSURANCE SCHEME in Government Institutions:**

With reference to G.O.(Ms)No.17, Health and Family Welfare (EAPI/1) Department, dated: 23.01.2017, the Government had given guidelines to ensure uniform maintenance of accounts and expenditure in all Government. Director of Medical Education & Research / Director of Medical and Rural Health Services.

(i) For Hospitals empaneled under Chief Minister's Comprehensive Health Insurance Scheme, similar accounting system is to be followed.

(ii) The claims amount can be apportioned as given below:-

1) Institutional Development Fund - 40%

2) Consumables - 50%

3) Incentive - 10%

10% Incentive may further be apportioned as follows:-

a) Treating Doctors - 4%

b) Anaesthetists - 2%

c) Staff Nurse - 2%

d) Supporting Departments. - 2%

(Supporting Departments include other allied treating departments, laboratory departments, and radiology wing involved in the treatment of the patient)

For the cases, not requiring anaesthetist intervention, the 2% of the incentive allotted for anaesthetist may be transferred to consumables or Infrastructure based on need after proper committee resolution.

(iii) The claim Amounts shall be held in bank accounts as follows:-

a) Institutional New Health Insurance Scheme Development Fund Account (IDF) — One account for one institution operated and signed jointly by the Dean and Administrative Officer

b) Department New Health Insurance Scheme account: One account for each department treating the New Health Insurance Scheme patients as done under Chief Minister's Comprehensive Health Insurance Scheme which shall receive the claim directly and then apportion the amount as given above, transfer the IDF apportionment to the New Health Insurance Scheme IDF account and Incentives directly to the accounts of the human resources as mentioned through ECS as done under Chief Minister's Comprehensive Health Insurance Scheme. Consumable expenditure shall be carried out under this account.

**10. Administration of Funds of NEW HEALTH INSURANCE SCHEME:**

New Health Insurance Scheme Committee at the institution level should be constituted similar to the existing Chief Minister's Comprehensive Health Insurance Scheme committee to monitor New Health Insurance Scheme funds. In case of additional staff requirement, the existing norms under Chief Minister's Comprehensive Health Insurance Scheme may be adhered. For any other operational issues under New Health Insurance Scheme, the guidelines given in G.O.(Ms)No.17, from Health and Family Welfare (EAPI/1) Department, dated: 23.01.2017.

**11. Records of Patients Treated under NEW HEALTH INSURANCE SCHEME:**

The case records shall be retained in the Medical Records Department as per hospital protocol.

**GAGANDEEP SINGH BEDI**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**/ True Copy/**

**SECTION OFFICER**

தொலைபேசி எண் : 28593458

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

Recognised in G.O. MS.No. 2141 Public (Service - A) Department Dated 06-10-1966

மாநில மையம்

க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

நாள்: 17.03.2024

# மாநில நிருவாகிகள் கூட்ட முடிவுகள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிருவாகிகள் கூட்டம் 17.03.2024 அன்று திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட மைய கட்டடம் சுந்தர்ராஜ் மேன்ஷனில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு.ஆர்.எஸ்.இராஜகோபால், மாநிலச் செயலாளர்கள் திரு.எஸ்.பார்த்திபன் மற்றும் ஆ.தமிழரசன் ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. மாநிலச் செயலாளர் திரு.மு.சுப்பு பங்கேற்கவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முதல் நிகழ்வாக திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைவர் திரு.பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார். அஞ்சலி தீர்மானத்தை மாநிலத் துணைத் தலைவர் திரு.இ.மணிகண்டன் முன்மொழிந்தார்.

கடந்த 02.03.2024 அன்று திருவள்ளூரில் நடைபெற்ற அவசர மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில முன்னாள் துணைத்தலைவர் திரு.என்.சக்திவேல், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.யூஜின் மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.மாணிக்க மூர்த்தி ஆகியோரது மறைவிற்கும், பல்வேறு இயற்கை சீற்றங்களினால் உயிரிழந்தவர்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில், கடந்த கால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாகவும், குறிப்பாக திருவள்ளூர் அவசர செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி 07.03.2024 அன்று சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக காத்திருப்பு போராட்டம் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியதாகவும், இதன் விளைவாக 116 ஈப்புகள் ஒதுக்கீடு உள்ளிட்ட குறிப்பிடத்தக்க அரசாணைகள் சிலவற்றை பெற முடிந்தது என்றும் குறிப்பிட்டார். இதற்கு காரணம் நமது அமைப்பின் உருக்கு போன்ற வலிமை மற்றும் உறுப்பினர்களின் ஒற்றுமை ஆகியவைதான் என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை கடந்த 22.12.2023 மற்றும் 23.12.2023 ஆகிய தினங்களில் சென்னையில் நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 17.12.2023 அன்று தென் தமிழகத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத மழைப்பொழிவினால் திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் வருவாய் மற்றும்

பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் முழுமையான அளவில் ஈடுபட வேண்டி வைர விழா மாநில மாநாடு தள்ளி வைக்கப்பட்டது என்றும், பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் மாநாட்டினை சென்னையில் நடத்திடலாம் என்றும் தெரிவித்தார்.

மாநிலத் தலைவர் தனது உரையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட தொடர் இயக்க நடவடிக்கைகளின் விளைவாக 2022ம் ஆண்டு வரை துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடப்பட்டு இதுவரை 194 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள 45 துணை ஆட்சியர்களுள் 27 அலுவலர்கள் வரை மீண்டும் துணை ஆட்சியராக பதவி உயர்வு பெற்றுள்ளதாகவும், மீதமுள்ள அலுவலர்களுக்கும் சிறப்பினமாக கருதி துணை ஆட்சியர் பதவி உயர்வு அளித்திட வலியுறுத்தி மாநில மையத்தின் சார்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 27.02.2024 முதல் 11 நாட்கள் நடைபெற்ற வரலாற்று சிறப்பு மிக்க காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் ஏற்படுத்திய மிகப்பெரிய தாக்கத்தின் காரணமாக நமது பிரதான கோரிக்கையான பட்டதாரி அல்லாதோர் பணியிறக்க பாதுகாப்பு அரசாணை பெறப்பட்டது தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் இயக்க வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது என்றும், இந்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றிக்கு காரணம் நமது இடைவிடாத தொடர் இயக்க நடவடிக்கைகளே எனவும் உறுதிபட தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் சென்னையில் நடத்திட திட்டங்களை வகுத்து மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை பங்கேற்பு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், எனவே மாநாட்டுப் பணிகளை சிறப்பாக திட்டமிட்டு செயல்படுத்திட ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குழுக்களை மீண்டும் புனரமைப்பு செய்து பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும், மேலும் மாநாட்டிற்கு முன்பாக இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை, அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட நிலுவைக் கோரிக்கைகளின் மீது அழுத்தம் கொடுத்து விரைந்து அரசாணைகள் பெறப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள், அதீத பணி நெருக்கடி மக்களுடன் முதல்வர் திட்டப்பணிகள் மற்றும் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதால் மாவட்டங்களில் பணிபுரிந்து வரும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு வகையிலான பணி நெருக்கடிகள், இளநிலை வருவாய் ஆய்வாளர் / தட்டச்சர் ஆகியோருக்கு இடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்வதில் மனிதவள மேலாண்மைத்துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ள தேவையற்ற குளறுபடிகள், இதனால் அனைத்து நிலையிலான பதவி உயர்வில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் மாநிலத் தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பொதுக் கோரிக்கைகளை வென்றெடுத்திட அரசு அங்கீகாரம் பெற்ற வருவாய்த்துறை சங்கங்களுடன் இணைந்து போராடும் வகையில் வருவாய்த்துறை அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்திடும் விதமாக ஏற்கனவே கட்டட நிதி தணிக்கை குழு, ஆவணக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதாகவும், ஆனால் மேற்கண்ட குழுக்கள் அனைத்தும் செயல்பாடின்றி முடங்கியுள்ளதால் இதனை இரண்டு மாத காலத்திற்குள் சரி செய்திட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் தனது உரையில் கடந்த 02.03.2024ல் திருவள்ளூர் நகரில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு பின்பாக கடந்த 15 நாட்களில் மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 05.03.2024 அன்று சென்னையில் அரசு முதன்மைச் செயலாளர்/தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரதசாஹூ, இ.ஆ.ப. அவர்களைச் சந்தித்து 2024ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் முன்கூட்டியே நிதி ஒதுக்கீடு வழங்கிடக் கோரி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும், மேலும் கடந்த 15.03.2024 அன்று சென்னையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் திரு.இராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) மரு.எஸ்.நடராஜன், இ.ஆ.ப., ஆகியோரைச் சந்தித்து வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்வைகக் ப்பட்டு நிலுவையிலுள்ள பிரதான கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் கடந்த 15.03.2024 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிச்செயலாளர் III திரு.ப.உ.சண்முகம், இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முன்வைக்கப்பட்டு நிலுவையிலுள்ள இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கைகள் ஆண்டுக் கணக்கில் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது குறித்தும், எனவே இவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து அரசாணைகள் வெளியிட வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த கால நடவடிக்கைகளில் சங்கத்தின் செயல்பாடுகள் சிறப்பான முறையில் உள்ளதாகவும், இதனை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் வருவாய்த்துறை அலுவலர்களின் அனைத்து கோரிக்கைகளையும் வென்றெடுத்திட இயலும் எனவும், எனவே மாவட்ட மையங்களை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவவாக எடுத்துரைத்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் நடப்பாண்டிற்கான உறுப்பினர் இணைப்புக்கட்டணம், சங்கக்குரல் சந்தா, வைரவிழா மாநில மாநாட்டு நிதி, கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, மாநில மைய காலண்டர் நிதி மற்றும் TNGEA மாநாட்டு நிதி உள்ளிட்ட நிதி நிலுவை இனங்கள் மற்றும் கடந்த ஒரு மாதத்திற்கான வரவு செலவு குறித்த அறிக்கையினை கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

அனைத்து மாநில நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப்பட்டன.

1) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்க பாதுகாப்பு விதித்திருத்த அரசாணை, 114 ஈப்புகள் ஒதுக்கீடு மற்றும் உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாமிற்கு வட்டத்திற்கு தலா ரூ.50000/- நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், நிதித்துறை செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் & வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளர் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உயர் அலுவலர்கள் அனைவருக்கும் மாநில மையத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

2) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கு பின்னர் சென்னையில் சிறப்பாக நடத்திடுவது என்றும், இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த உயர் அலுவலர்களை சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றிட அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

3) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு 7 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது விரைந்து அரசாணை வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

4) இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகியோருக்கிடையே ஒருங்கிணைந்த பணி முதுநிலை நிர்ணயிப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இதனால் அவர்களுக்கிடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்து, முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தில் மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் அவர்கள் நேரடியாக தலையிட்டு உரிய தெளிவுரை வழங்கிட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

5) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம் / ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளை இரவு / பகல் பாராது விடுமுறை தினங்களில் கூட தொடர்ந்து 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

6) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாக உள்ள மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடுமாறு கடந்த ஓராண்டாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இதுவரை இப்பணியிடங்கள் நிரப்பப்படாததால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மிகுதியான காலிப் பணியிடங்கள் உள்ளது. எனவே இவ்வினத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய ஆணைகள் வழங்கிடுமாறு தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

7) பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காக்கக்கூடிய பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டு வந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை கடந்த 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதை இரத்து செய்து, கலைக்கப்பட்ட 97 பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

8) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் வரப்பெறும் மனுக்களை விரைவாக முடிவு செய்திடும் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி "முதல்வரின் முகவரி" மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

9) 2024நாடாளுமன்றத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டினை அரசு மற்றும் முதன்மைத் தேர்தல் அலுவலரால் பேச்சுவார்த்தையின் போது உறுதியளித்தபடி 2024ஏப்ரல் முதல் வாரத்திலேயே முழுமையாக வழங்கிட தமிழக தலைமைத் தேர்தல் அலுவலரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

10) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 2024 தற்காலிக பணியிடங்கள் மற்றும் முத்திரைத்தாள் பிரிவில் உள்ள 174 தற்காலிக பணியிடங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மாதந்தோறும் குறித்த நாட்களில் ஊதியம் பெற இயலாமல் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். எனவே இதனைக் களைந்திடும் விதமாக மாதந்தோறும் ஊதியக் கொடுப்பாணை வழங்கிடும் நடைமுறையினை இரத்து செய்து, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஊதியக் கொடுப்பாணை வழங்கிடுமாறும், மேலும் தற்காலிக பணியிடங்களை மறுசீரமைத்திட தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு விலக்கு அளித்திடுமாறும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

11) புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதிக அளவிலான காலிப்பணியிடங்கள் இருந்தும், உரியகாலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஓராண்டிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. மேலும் இதுகுறித்து பாதிக்கப்பட்டுள்ள அலுவலர்களை நேரிடையாக விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தில் உடனடியாக ஆணை பிறப்பித்திட வருவாய்த்துறை செயலாளரை வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

12) ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு கடந்த ஓராண்டாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இதன்மீது விரைந்து உரிய ஆணைகள் பிறப்பித்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

13) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மாவட்ட வருவாய் அலகுகளில் தேர்தல் பணியில் ஈடுபட்டு வந்த தற்காலிக இளநிலை உதவியாளர் பணியிடங்கள் அனைத்தும் எவ்வித முன்னறிவிப்புமின்றி கடந்த 31.05.2023 முதல் கலைக்கப்பட்டது. இதனால் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த அலுவலர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து சொல்லொணாத் துயரத்தில் உள்ளனர். எனவே அவர்களின் பணித்தன்மை மற்றும் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு தற்காலிக இளநிலை உதவியாளர் பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்திட தமிழக முதன்மைத் தேர்தல் அலுவலரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

14) தமிழகத்தில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது பன்மடங்கு உற்பத்தி கூடுதலாக நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் குறைந்த அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டும், தவறான பயன்பாடுகளை தடுத்திடும் வகையிலும், கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்படுத்திட உள்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

15) 16.08.2022, 01.11.2022, 10.05.2023, 16.05.2023 மற்றும் 0803.2024 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அரசு மட்டத்திலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

16) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்ததை ரத்து செய்திட வலியுறுத்தி அறவழியில் போராட்டம் நடத்திய வருவாய்த்துறை அலுவலர்கள் மீது கடுமையான பிரிவுகளின் கீழ் புனையப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்திட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு கூடுதல் தலைமைச்செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்றும், இதில் தீர்வு ஏற்படாதபட்சத்தில் தொடர் இயக்க நடவடிக்கைகளை திட்டமிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

17) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட 2024ம் ஆண்டிற்கான உறுப்பினர் சேர்க்கை மற்றும் சங்கக் குரல் சந்தா சேகரிப்பு இயக்கத்தை அனைத்து மாவட்டம், நகரம் மற்றும் வட்டக் கிளைகளில் உடன் தொடங்குவது என்றும், உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து 31.05.2024 இறுதிக்குள் தவறாது செலுத்திட அனைத்து மாவட்டங்களையும் வலியுறுத்துவதெனவும், மேலும், சென்னை தலைமையக கட்டட நிதிநிலுவை, வைர விழா மாநில மாநாட்டு நிதி, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, 2023 & 2024ம் ஆண்டுகளுக்கான நாட்குறிப்பு நிதி, நாட்காட்டி நிதி உள்ளிட்ட அனைத்து நிதி நிலுவை இனங்களையும் இம்மாத இறுதிக்குள் செலுத்திடுமாறு மாவட்ட மையங்களை வலியுறுத்தவதென முடிவு செயய்ப்பட்டது.

இறுதியாக, மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் குறுகிய காலத்தில் மாநில நிருவாகிகள் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். ■



நாமக்கல் வட்ட கூட்டரங்கில் மாவட்டச் செயலாளர் விஜயகாந்த் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டம்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



TNROA மேனாள் மாநில பொதுச் செயலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் அருமைத் தலைவர் திரு.கே.முருகன் அவர்கள் அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு 30.5.2024 அன்று அண்ணா மேலாண்மை பயிற்சி மைய அலுவலகத்தில் சந்தித்து, மாநில மையத்தின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு நினைவு பரிசு வழங்கப்பட்டது.
உடன் மேனாள் மாநிலத் தலைவர் த.டியூக் பொன்னுராஜ்.



8.5.2024 அன்று நடைபெற்ற மயிலாடுதுறை மாவட்ட செயற்குழுக் கூட்டம்



TNROA மாநில தலைவர் திரு.எம்.பி. முருகையன் மற்றும் மாநிலத் துணைத் தலைவர் திரு.வெ.அர்த்தனாரி ஆகியோர் நாமக்கல் மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கைகள் குறித்து விரிவாக பேசியபோது...

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
May 2024

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002



TNROA நிர்வாகிகள் கூட்டத்தில் தமிழகம் முழுவதும் 60 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு பராமரித்திட வேண்டும் என்ற முடிவின்படி, மயிலாடுதுறை மாவட்டத்தில் இளவரசன் தலைமையில் சீர்காழி கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP. 3 / 2015-2017




தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 4.5.2024 அன்று கரூரில் நடைபெற்றது.
இதில் பங்கேற்ற மாநில நிர்வாகிகள்.

If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.